TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under section 173 BNSS) ~~(Under Section 154 Cr.P.C)~~
(பா.ந.பா.ச பிரிவு 173ன் கீழ்) ~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~

C 8101980

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் VAAC Year: ஆண்டு 2024 FIR No.: மு.த.அ. எண் 09/2024 Date: நாள் 12.08.2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: by Prevention of corruption Sections பிரிவுகள்: as amended by PC
(iii) Act சட்டம்: (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: (Amendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 06.08.2024 at 1200 hrs.
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை 2) 09.08.2024 at 11.30 hrs.

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 12.08.2024 Time நேரம் : 07.25 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 12.08.2024 Time நேரம் : 09.05 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed Petition.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 65 km, South west.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி Surveyor sec, Peraiyur Taluk office, Peraiyur, Madurai Dist

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் M. Ramasamy (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Mahalingam.
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 03.05.51 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி 4/488, Chinnakattalai, Peraiyur (T.K), Madurai Dist.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tmt. V. Jothi, Firka Surveyor, Sedapatti Firka, Peraiyur Taluk, Madurai Dist.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary) —

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved : —

களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —

பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached separate Sheet Pages 3 to 9

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

12.08.2024 | 12/8/2024

14. Signature / Thumb impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

12-08-2024 at 09:40 hrs.

Name: பெயர் K. KUMARAGURU
Rank: நிலை Inspector of Police No. எண்
AWPS,
Madurai.

அய்யா, பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 12.08.2024-ஆம் தேதி காலை சுமார் 07.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா, சின்னக்கட்டளையில் வசித்து வரும் மகாலிங்கம் என்பவரது மகன் திரு.ராமசாமி என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் M. ராமசாமி, த/பெ.மகாலிங்கம், 4/488, சின்னக்கட்டளை, பேரையூர் தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் பேரையூர் தாலுகா, சின்னக்கட்டளையில் சென்னம்பட்டி ரோட்டில் உள்ள சர்வே எண்கள் 26/5H, 27/9 மற்றும் 54/31-ல் உள்ள எனது தோட்டத்தில் வீடு கட்டி, எனது மனைவி சுப்புத்தாயி உடன் வசித்து வருகிறேன். நான் S.S.L.C. படித்துள்ளேன். எனது மூத்த மகன் செல்வகுமார் கோவையில் லாரி டிரைவாக வேலை செய்து வருகிறார். எனது இளையமகன் மகேந்திரன் TATA Ace டிரைவராக உள்ளார். அவர்கள் இருவருக்கும் திருமணமாகி தனித்தனியாக வசித்து வருகின்றனர். நான் குடியிருக்கும் தோட்ட இடங்களை எனது அப்பா மகாலிங்கம் சிறிது சிறிதாக வாங்கினார். அவர் கடந்த 1964-ம் ஆண்டு கந்தசாமி தேவர் என்பவரிடமிருந்து சர்வே எண். 46/4B–ல் இருந்த 15 செண்ட் நிலத்தை சிந்துபட்டி சார்-பதிவாளர் அலுவலக ஆவண எண். 1057/1964, நாள்: 15.04.1964-ன் படி கிரையமாக பெற்றார். பின்பு 1966-ம் ஆண்டில் மீண்டும் கந்தசாமி தேவரிடமிருந்து சர்வே 49/1–ல் இருந்த 30 செண்ட் மற்றும் சர்வே 49/2A–ல் இருந்த 30 செண்ட் என ஆக மொத்தம் 60 செண்ட் நிலத்தை சிந்துபட்டி சார்-பதிவாளர் அலுவலக ஆவண எண். 1210/1966, நாள்: 29.04.1966-ன் படி கிரையமாக பெற்றார். அதன்பிறகு 1967-ம் ஆண்டு வேலாண்டித்தேவர் மற்றும் சங்கரத்தேவர் ஆகியோரிடமிருந்து சர்வே 46/4B–ல் இருந்த 30 செண்ட் நிலத்தை சிந்துபட்டி சார்-பதிவாளர் அலுவலக ஆவண எண். 401/1967, நாள்: 18.02.1967-ன் படி கிரையமாக பெற்றார். அந்த நிலங்கள் அத்தனையும் சேர்த்து, மொத்தம் 1 ஏக்கர் 5 செண்ட் இடம் எனது அப்பா மகாலிங்கம் பெயரில் பட்டா இருந்தது. எனது தந்தை 1992-ஆம் ஆண்டு இறந்து விட்டார். அதன்பிறகு இந்த சொத்துக்களை எனது பெயரிலும், எனது தம்பி

பிச்சைமணி பெயரிலும் கூட்டுப்பட்டாவாக மாற்றிக் கொண்டோம். இந்த சொத்தானது வருவாய்த்துறை ஆவணங்களின் ரீ சர்வே-ன் படி மொத்தம் 46 ஏர்ஸ் (1 ஏக்கர் 13 சென்ட்) என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த சொத்துக்களை நானும், எனது தம்பியும் சரிபாதியாக பயன்படுத்தி வந்தோம். எனது தம்பி பிச்சைமணி கடந்த 20.03.2004-ஆம் தேதியன்று இறந்து விட்டார். அதனால் எனது தம்பியுடைய பங்கினை அவருடைய வாரிசுதாரர்களான தம்பி மனைவி ஒளிவு மற்றும் அவர்களது மகள்கள் விஜயா மற்றும் ஜெயமணி, மகன் முத்துராஜா மற்றும் எனது அம்மா அங்கம்மாள் ஆகியோர் எனக்கு சிந்துபட்டி சார்பதிவக ஆவண எண். 119/2018, நாள்: 31.01.2018-ன் படி கிரையமாக பதிவு செய்து கொடுத்தார்கள். அதன்படி சர்வே 26/5H-ல் 9.00 ஏர்ஸ், 27/9-ல் 18.50 ஏர்ஸ், 54/3I-ல் 18.50 ஏர்ஸ் என மொத்தம் 46.00 ஏர்ஸ் இடமும் என்னுடைய பெயரில் பட்டா எண். 1288-ன் படி மாற்றம் செய்யப்பட்டு, எனது அனுபவத்தில் இருந்து வருகிறது. இதில் சர்வே எண். 54/3I-ல் 18.50 ஏர்ஸ் (45.72 சென்ட்) நிலத்தை அதன் பக்கத்தில் உள்ள நிலத்தின் உரிமையாளர்கள் அபகரித்து உள்ளதால், அந்த இடத்தை அளந்து, அத்துமால் குறித்து தருவதற்கு, நான் கடந்த 09.01.2024-ந் தேதியன்று ஆன்லைனில் மனு எண். 2024/0123/24/000878-ன் படி விண்ணப்பித்து, அத்துமாலுக்கான கட்டணம் ரூ.2,260/- செலுத்தினேன். யாரும் அளக்க வராததால், நான் பேரையூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்று ஹெட் சர்வேயர் திரு.பாண்டி அவர்களை நேரில் பார்த்து அத்துமால் அளப்பது குறித்து கேட்டேன். அவர் சர்வேயரை அனுப்பி வைப்பதாக கூறினார். பின்னர் மீண்டும் யாரும் அளக்க வராத காரணத்தினால் கடந்த 05.02.2024-ஆம் தேதியன்று பேரையூர் தாலுகா ஆபிஸிற்கு சென்று அங்கிருந்த ஹெட் சர்வேயர் தீபன் அவர்களை சந்தித்து என்னுடைய அத்துமால் அளப்பது சம்பந்தமாக கேட்டேன். அவர் அனுப்பி வைப்பதாக கூறினார். அப்போது அவரிடம் என்னுடைய FMB-யை காண்பித்து நிலத்தின் அளவு குறித்து கேட்டபோது, அவர் FMB-யை வாங்கி பார்த்துவிட்டு சுமார் 48 சென்ட் இடம் உள்ளதாகவும், அதனை அளப்பதற்கு சேடப்பட்டி பிர்கா சர்வேயர் ஜோதியை அனுப்பி வைப்பதாகவும் கூறினார். பின்பு மறுநாள் 06.02.2024-ஆம் தேதியன்று நான் மீண்டும் பேரையூர் தாலுகா ஆபிஸிற்கு மாலை சுமார் 04.00 மணியளவில் சென்று, அங்கிருந்த சேடபட்டி பிர்கா சர்வேயர் திருமதி.ஜோதி அவர்களை சந்தித்து எனது இடத்தின்

அத்துமால் சம்பந்தமாக கேட்டேன். அதற்கு சர்வேயர் ஜோதி அவர்கள் நான்தான் உங்கள் இடத்தை அளந்து, அதற்கான அத்துமால் சான்று வழங்க வேண்டும் என தெரிவித்து, எனது நிலத்தை 16.02.2024-ஆம் தேதியன்று அளக்க வருவதாக கூறி, அதற்கான நோட்டீசு எண் 00878/2024-யை எனக்கு கொடுத்தார்கள். அப்போது தாலுகா அலுவலகத்தில் இருந்த நோட்டீசு போர்டில் இருந்த சர்வேயர் ஜோதி அவர்களுடைய செல்போன் 7708857291 எண்ணை நான் குறித்துக் கொண்டேன். பிறகு கடந்த 16.02.2024-ஆம் சர்வேயர் ஜோதி அவர்கள் சின்னக்கட்டளை தலையாரி முருகேசன் அவர்களுடன் எனது இடத்திற்கு காலை சுமார் 11.00 மணிக்கு அளக்க வந்தார்கள். ஆனால் எனது பக்கத்து இடத்துக்காரர்களுக்கு அந்த நோட்டீசு கிடைக்காததால் அவர்கள் அன்று அளக்கவிடவில்லை. அதன்பின்னர் நான் எனது செல்போனிலிருந்து நான்கு, ஐந்து முறை சர்வேயர் ஜோதி அவர்களை அவரது செல்போனில் தொடர்பு கொண்டு அளப்பது சம்பந்தமாக பேசியபோது, அவர் விரைவில் அளந்து கொடுப்பதாக கூறினார். கடந்த மே மாதம் வரை அத்துமால் குறித்து எந்த தகவலும் தெரிவிக்கவில்லை. மேலும் எனது பக்கத்து இடத்துக்காரர்கள் சோளம் பயிரிட்டு இருந்ததாலும், அது அறுவடை செய்ய ஒரு மாதம் ஆகும் என்பதாலும், நான் கடந்த 02.05.2024-ஆம் தேதியன்று காலையில் பேரையூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று வட்டாட்சியர் திரு.செல்லப்பாண்டி அவர்களை சந்தித்து எனது நிலத்திற்கான அத்துமால் நில அளவையை ஜூலை மாத கடைசியில் அளந்து கொடுக்க கேட்டு மனு கொடுத்தேன். சோளம் அறுவடை முடிந்த பிறகு, கடந்த 10.07.2024-ந் தேதியன்று எனது நிலத்தை அளப்பதற்கு மீண்டும் வட்டாட்சியரை சந்தித்து மனு கொடுத்தேன். அவர் அதனை சர்வே பிரிவிற்கு அனுப்பி நடவடிக்கை எடுக்க வைப்பதாக கூறினார். மறுநாள் 11.07.2024-ந் தேதியன்று நான் பேரையூர் தாலுகா சர்வே பிரிவிற்கு மாலை சுமார் 04.00 மணிக்கு சென்று சர்வேயர் ஜோதி அவர்களை சந்தித்து, எனது அத்துமால் சம்பந்தமாக கேட்டேன். அவர் 16.07.2024-ந் தேதி அளக்க வருவதாக கூறி என்னிடம் ஏற்கனவே 06.02.2024-ந் தேதியன்று கொடுத்த நோட்டீசை மீண்டும் என்னிடமிருந்து வாங்கி அதில் கையொப்பம் இட்ட தேதியான 06.02.2024-யை, 06.07.2024-ஆம் தேதி என மாதத்தை திருத்தி என்னிடம் கொடுத்தார். அந்த நோட்டீசில் அளக்க இருந்த 16.02.2024-ந் தேதியை 16.07.2024- என மாதத்தை திருத்தி என்னிடம் கொடுத்தார். பின்னர் 16.07.2024-

ம் தேதியன்று காலையில் இது சம்பந்தமாக நான் சின்னக்கட்டளை VAO அலுவலகத்திற்கு சென்ற போது, அங்கிருந்த சின்னக்கட்டளை தலையாரி திரு. முருகேசன் என்பவர், சர்வேயர் ஜோதி அவர்கள் இன்று கலெக்டர் ஆபிஸில் மீட்டிங் இருப்பதால் அளக்க வரமாட்டார் என என்னிடம் தகவல் தெரிவித்தார். நான் வீட்டிற்கு வந்து விட்டேன். அதன்பின்னர் கடந்த 23.07.2024-ந் தேதியன்று காலை சுமார் 11 மணியளவில் நான் பேரையூர் தாலுகா சர்வே பிரிவிற்கு சென்று பிர்கா சர்வேயர் ஜோதி அவர்களை சந்தித்து இது சம்பந்தமாக கேட்டபோது, அவர் 05.08.2024-ந் தேதியன்று என்னுடைய இடத்தை அளக்க வருவதாக கூறி, அதற்கான நோட்டீசை என்னிடம் கொடுத்தார். அதேபோல் எனது பக்கத்து இடத்துக்காரர்களுக்கும் சின்னக்கட்டளை தலையாரி முருகேசன் மூலமாக நோட்டீசையும் கொடுத்து சார்பு செய்தார். அதன்படி கடந்த 05.08.2024-ந் தேதியன்று காலை 11.30 மணியளவில் நான் சின்னக்கட்டளை VAO அலுவலகத்திற்கு சென்று சர்வேயர் ஜோதி அவர்களுக்காக காத்திருந்தேன். அப்போது, அவ்வலுவலகத்தில் தலையாரி முருகேசன் இருந்தார். அந்த சமயத்தில் சர்வேயர் ஜோதி அவர்கள் தலையாரி முருகேசன் செல்போனிற்கு பேசி, தான் கலெக்டர் ஆபிஸில் இருப்பதால் இன்று அளக்க வரமுடியவில்லை என கூறியுள்ளார். அத்தகவலை தலையாரி முருகேசன் என்னிடம் தெரிவித்தார். உடனே நான் மதியம் சுமார் 12.00 மணியளவில் என்னுடைய செல்போன் 9159530132 எண்ணிலிருந்து சர்வேயர் ஜோதி அவருடைய செல்போன் 7708857291 எண்ணை தொடர்பு கொண்டு நான் பேசியபோது அவர் என்னிடத்தில், தான் கலெக்டர் ஆபிஸில் இருப்பதால் இன்று அளக்க வரமுடியவில்லை. நாளைக்கு வருகிறேன் எனக்கூறி போனை வைத்துவிட்டார். மறுநாள் காலை சுமார் 10.15 மணியளவில் என்னுடைய செல்போன் எண்ணிற்கு ஜோதி அவர்கள் அவரது செல்போனிலிருந்து தொடர்பு கொண்டு என்னிடத்தில், நான் உங்கள் இடத்தில் இருக்கின்றேன். நீங்கள் எங்க இருக்கீங்க என்று கேட்டார். அவரிடம் நான் பஞ்சாயத்து அலுவலகத்தில் உள்ளேன். இதோ வந்து விடுகிறேன் என்று கூறி காலை சுமார் 10.30 மணியளவில் நான் எனது இடத்திற்கு சென்றேன். அச்சமயத்தில் என்னுடைய இடத்தில் எனது இரண்டு மகன்களான செல்வகுமார், மகேந்திரனும், பக்கத்து இடத்துக்காரர்களான நோட்டீசில் குறிப்பிடப்பட்ட தங்கம்,

முத்து, மகாலிங்கத்தின் மனைவி, சர்வேயர் ஜோதி, பேரையூர் டவுன் சர்வேயர் ஜெயராமன் தலையாரி முருகேசன் ஆகியோர் இருந்தார்கள். சர்வேயர் ஜோதி மற்றும் ஜெயராமன் ஆகிய இருவரும் எனது மகன்கள் உதவியுடன் சுமார் ஒன்றரை மணிநேரம் என்னுடைய இடத்தை அளந்து, அளவை கற்களை ஊன்றினார்கள். பிறகு சர்வேயர் ஜோதி என்னை தனியாக அழைத்து, என்னிடம் உங்கள் இடத்தை அளந்து கொடுத்தாச்சு எனத் தெரிவித்தார். அதற்கு நான் அவரிடம் என்னுடைய இடத்திற்கான அத்துமால் செய்ததற்கான அத்துமால் சர்டிபிகேட் கேட்டேன். அதற்கு அவர், அத்துமால் சர்டிபிகேட் தருவதற்கு ஐயாயிரம் ரூபாய் தனக்கு தரவேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் சர்வே செய்வதற்கு ஆன்லைனில் ரூ.2,260/- செலுத்தி விட்டனே, பிறகு எதற்கு பணம் கொடுக்க வேண்டும் என்று கேட்டேன். அதற்கு சர்வேயர் ஜோதி அவர்கள், அந்த பணம் அரசுக்கு செலுத்திய பணம். இது என்னுடைய செலவிற்கு தனியாக தரவேண்டியது என்றும் பணத்தை கொடுத்தால் தான் அத்துமால் சர்டிபிகேட் கொடுப்பேன் என்று கண்டிப்புடன் கூறி சென்று விட்டார். என்னால் பணத்தை தயார் செய்ய முடியவில்லை. அதனால் கடந்த 09.08.2024ந் தேதியன்று காலை சுமார் 11 ½ மணிக்கு பேரையூர் தாலுகா அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த பிர்கா சர்வேயர் ஜோதி அவர்களை சந்தித்து, என்னுடைய அத்துமால் சர்டிபிகேட் குறித்து கேட்டேன். அதற்கு சர்வேயர் ஜோதி அவர்கள் நான் கேட்ட பணம் ரூ.5,000/- என்னாச்சு என்று கேட்டார். அதற்கு நான், விவசாயம் தான் செய்து வருகிறேன். விளைச்சலும் இல்லை. அவ்வளவு பணம் என்னால் ரெடி பண்ண முடியவில்லை என தெரிவித்தேன். அதற்கு சர்வேயர் ஜோதி அவர்கள், சரி உங்களுக்காக மூவாயிரம் குறைத்து கொண்டு, ரூ.2,000/- கொடுங்க என்று கேட்டார். அதற்கு நான் பணத்தை ரெடி செய்து வருகிறேன் என்று கூறினேன். அதற்கு சர்வேயர் ஜோதி அவர்கள் என்னிடத்தில், 12.08.2024-ஆம் தேதி திங்கள் கிழமை காலையில் பேரையூர் தாலுகா அலுவலகத்திற்கு வந்து நீங்கள் ரூ.2,000/- என்னிடத்தில் கொடுத்து உங்கள் இடத்திற்கான அத்துமால் சர்டிபிகேட்டை வாங்கிகொள்ளுங்கள், இல்லாவிட்டால் நீங்கள் அலைந்து கொண்டுதான் இருக்க வேண்டும் என கறாராக கூறிவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. திருமதி.ஜோதி அவர்கள் அத்துமால் சான்று வழங்க ரூ.2,000/-ம் லஞ்சமாக கேட்ட விபரத்தை எனது

மகன்கள் செல்வகுமார் மற்றும் மகேந்திரன் ஆகியோரிடம் தெரிவித்தேன். அவர்களும் அரசுக்கு செலுத்தவேண்டிய தொகையை செலுத்தியபின்பும் லஞ்சம் கேட்பதை அறிந்து மனவேதனைப்பட்டார்கள். அவர்கள் நடவடிக்கை எடுக்க மதுரை லஞ்ச ஒழிப்பு துறை அலுவலகத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். எனவே, அத்துமால் செய்ய அரசுக்கு பணம் செலுத்திய பின்பும், அத்துமால் செய்து, அதற்குரிய அத்துமால் சான்றிதழ் வழங்க, என்னிடம் ரூ.2,000/- லஞ்சம் கேட்கும் சேடப்பட்டி பிர்கா சர்வேயர் திருமதி.ஜோதி மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை கொடுக்கின்றேன், இத்துடன் 1) ஆன்லைனில் அத்துமாலுக்கு விண்ணப்பித்த விண்ணப்ப எண் 2024/0123/24/000878-ன் ஒப்புகைச் சீட்டு, 2)சிந்துபட்டி சார்பதிக ஆவண எண். 119/2018, நாள்: 31.01.2018, 3) என்னுடைய கணினி சிட்டா பட்டா எண். 1288, 4) நான் பேரையூர் வட்டாட்சியர் அவர்களுக்கு கொடுத்த மனுக்கள் நாள்: 02.05.2024 மற்றும் 10.07.2024, 5) சர்வேயர் ஜோதி அவர்கள் 16.07.2024 தேதி என்னுடைய இடத்தை அளக்க கொடுத்த நோட்டீஸில் 16.02.2024-என்ற தேதியை 16.07.2024 என மாதத்தை திருத்தி கொடுத்த நோட்டீசு எண். 00878/2024 மற்றும் 6) 05.08.2024ந் தேதி அளக்க வருவதாக 23.07.2024 ஆம் தேதி என்னிடம் கொடுத்த நோட்டீஸ் ஆகியவற்றின் நகல்களை இணைத்துள்ளேன். மேலும், சேடப்பட்டி பிர்கா சர்வேயர் திருமதி.ஜோதி அவர்கள் கேட்ட லஞ்சப் பணம் ரூ.2,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) XXXXX 12.08.2024 (M.Ramasamy).

Sir, Received the complaint on 12.08.2024 at 07.25 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai Vigilance and Anti-Corruption Cr.No. 09/2024 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 09.05 hrs and took up investigation. Sd./-XXXXX (K.Kumaraguru) 12.08.2024, Inspector of Police, V & AC, Madurai.

Original FIR along with original typed complaint of M. Ramasamy S/o.Mahalingam, Chinnakattalai Village, Peraiyur Taluk, Madurai District along with xerox copies of online application no.2024/0123/24/000878, Sindupatti Sub-Registrar office.Document No. 119/2018, dated 31.01.2018, patta No.1288 in the name of Tr.M.Ramasamy, Petition to Thasildar, Peraiyur Taluk, Madurai District dated 02.05.2024 and 10.07.2024, Notice No.00878/24 dated 16.07.2024, and notice dated 05.08.2024 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

12/8/2024

(K.Kumaraguru)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Madurai.